## பிரதம மாவட்ட நீதிமன்றம், திருவள்ளூர்.

இந்நீதிமன்ற உதவியாளர் திரு. மோகன் அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு இந்திய சாட்சிய சட்டம் 1871, பிரிவு 1-ன் கீழ் மனுதாரர்/ எதிர்மனுதாரர் தரப்பு 1வது சாட்சியாக விசாரிக்கப்பட்டு 2025-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 31 ஆம் நாள் பதிவு செய்யப்பட்டது.

பெயர்.................................................... மாவட்டம்........................................................

கிராமம்............................................................ தந்தை /கணவர் பெயர்...........................................

தாலுக்கா........................................................... தொழில்..................................................................

-----------------------------------------------------------------------------------------------------------

# G.W.O.P. No. 676/2021

# 31.01.2025

**ம.த.சா.1 - திரு. அருணாச்சலம், த/பெ. நாகராஜன்**

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் திருவள்ளூர் மாவட்டம், கோவர்த்தனகிரியில் வசித்து வருகிறேன். நான் இந்த மனுவின் மனுதாரர். நான் மனுதாரர் தரப்பு சாட்சி 1. என் தரப்பு சாட்சியத்தை நான் கூடுதல் நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நன்றாக தெரியும். என் கூடுதல் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதனை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன்.

1. எதிர்மனுதாரரின் புகைப்படம் மற்றும் குறுந்தகடு **ம.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. ஆவடி, உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட விவரங்கள் **ம.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**மனுப்படி தீர்ப்பாக கேட்டுக்கொள்கிறேன்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

**நேரம் 15.07 மணி**

நாங்கள் இரண்டு பேரும் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரியல்ல,

நான் பிறந்து வளர்ந்தது சென்னை ஆகும். திருமணத்திற்கு முன்பு நான் எத்தனை முறை எதிர்மனுதாரரை சென்று பார்த்தேன் என்றால் பெண் பார்க்கச்சென்றபோது ஒருமுறை பார்த்தேன். திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றதா என்றால் சரிதான். நிச்சயதார்த்தம் முடிந்த பிறகு 2 மாதங்கள் கழித்து திருமணம் நடந்ததா அல்லது உடனே நடந்ததா என்றால் 2 அல்லது 3 மாதங்களில் திருமணம் நடந்தது. நிச்சயதார்த்ததிற்கு பிறகு நான் எதிர்மனுதாரரை சந்தித்தேனா என்றால் இல்லை. என் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் என் மனைவி மனநலம் பாதிக்கப்பட்டவர் என்று கூறியுள்ளேனா என்றால் Abnormal behaviour என்று கூறியுள்ளேன். Abnormal behaviour என்பதற்கு ஆதாரமாக மருத்துவரிடம் சிகிச்சை பெற்றதாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்றம் கோரும் பட்சத்தில் மருத்துவர் அளித்த prescription ஐ தாக்கல் செய்ய உள்ளேன். என் மனைவி என்ன படித்துள்ளார் என்றால் எம்.இ. படித்துள்ளார். தற்போது அவர் எங்கு வேலை செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. என் மகன் எந்த பள்ளியில் படித்து வருகிறார் என்றால் சுதர்சன் வித்யாலயா பள்ளியில் படித்து வருகிறார். திருமணம் முடிந்து நானும் என் மனைவியும் அமெரிக்கா சென்றோமா என்றால் சென்றோம். அமெரிக்கா செல்ல வேண்டுமென்றால் விசா வாங்க அமெரிக்கன் எம்பசியில் இன்டர்வியூ அட்டெண்ட் செய்ய வேண்டும் என்றால் சரிதான். என் மனைவியும் அந்த இன்டர்வியூவில் கலந்து கொண்டு பின்னர், என்னுடன் அமெரிக்கா வந்தார் என்றால் சரிதான். என்னுடைய விசா வேலை செய்வதற்காக உள்ள விசா என்பதால் என்னை மட்டும் தான் கேள்விகள் கேட்பார்கள். Immigration ல் தனித்தனியாக கேள்விகள் கேட்பார்கள் என்றால் என்னை மட்டும் தான் கேட்பார்கள். எத்தனை மாதங்கள் அமெரிக்காவில் இருந்தோம் என்றால் 6 மாதங்கள் இருந்தோம். அமெரிக்காவில் இருந்து வந்த பிறகு சென்னையில் இருந்தோமா அல்லது புனே சென்றோமா என்றால் சென்னையில் இருந்தோம். என் வேலை சம்மந்தமாக என் மனைவியை புனே அழைத்துச்சென்றேனா என்றால் வேலைக்காக சென்றேன். என் மனைவியை உடன் அழைத்துச்சென்று அங்கு வாடகை வீட்டில் வசித்தேன் என்றால் சரிதான். எத்தனை மாதங்கள் அங்கு இருந்தேன் என்றால் வருடக்கணக்கில் இருந்தேன். என் மனைவி அடிக்கடி அவர் தாயார் வீட்டிற்கு சென்றுவிடுவார். எனது பிரமாண வாக்குமூலத்தில் என் மனைவி அடிக்கடி

அவர் தாயார் வீட்டிற்கு சென்றுவிடுவார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. நான் இப்போது தான் என் மனைவி அடிக்கடி அவர் தாயார் வீட்டிற்கு சென்றுவிடுவார் என்று புதியதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அத்தனை நிகழ்வுகளையும் என் மனுவில் குறிப்பிடவில்லை. புனேவில் என் மகன் என்னுடன் தான் இருந்தாரா என்றால் இருந்தார். என் மகன் புனேவில் எத்தனை வருடங்கள் படித்தார் என்றால் எல்கேஜி முதல் 1ம் வகுப்பு வரை Lexon kids பள்ளியில் படித்தார். என் மனைவியும் அந்த பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்தார் என்றால் சரியல்ல. அந்த பள்ளியில் நடந்த விழாக்களில் என் மனைவி கலந்துகொண்டாரா என்றால் கலந்துக்கொண்டார், நானும் கலந்துக்கொண்டேன். ஆவடி கோவர்த்தனகிரியில் எத்தனை வருடங்கள் இருந்தேன் என்றால் நான் பிறந்து வளர்ந்தது எல்லாம் அங்கு தான். குழந்தை பிறந்த பிறகு என் மனைவி தான் குழந்தையை பள்ளிக்கு அனுப்புவது நான் வேலைக்கு செல்வதற்கு முன்பாக வீட்டு வேலைகளை செய்வது போன்ற வேலைகளை பார்த்துக்கொண்டார் என்றால் சரியல்ல. நான் எந்த கம்பெனயில் வேலை செய்கிறேன் என்றால் Whirlpool தனியார் கம்பெனியில் வேலை செய்கிறேன். புனேயில் தான் வேலை செய்து வருகிறேன் என்றால் என்னுடைய தலைமை அலுவலகம் அங்கு தான் உள்ளது. நான் தற்போது வீட்டில் இருந்து வேலை செய்து வருகிறேன். எந்த வருடத்திலிருந்து வீட்டில் இருந்து பணி செய்து வருகிறேன் என்றால் கோவிட் காலக்கட்டத்தில் இருந்து வீட்டில் இருந்து பணி செய்து வருகிறேன். கோவிட் முன்பாக நான் வேலைக்கு சென்றபிறகு என் மகனை என் பெற்றோர்கள் தான் பார்க்க வேண்டும் என்றால் நான் குழந்தையை ரெடி செய்து அழைத்து செல்வேன், பின்னர் பள்ளி முடிந்தவுடன் வீட்டிற்கு அழைத்து வந்து அவருடன் இருப்பேன். கோவிட் முன்பாக நான் நேரடியாக Whirlpool கம்பெனியில் தங்கி வேலை செய்தேனா அல்லது ஆவடியில் இருந்து வேலை செய்தேனா என்றால் அங்கு வாடகை வீட்டில் நான், என் மனைவி, குழந்தையுடன் இருந்தோம். என் மனைவியை விட்டு நான் பிரிந்த பிறகு எத்தனை வருடங்கள் புனேயில் இருந்தேன் என்றால் என் மனைவி தான் என்னை விட்டு பிரிந்துச்சென்றார். அதன்பிறகு கோவிட் காலக்கட்டம் நான் ஆவடியில் தான் இருந்தேன். நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்ஜாமீன் வாங்கினேனா என்றால் என் மனைவி என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததால் நான் முன்

ஜாமீன் பெற்றேன். எதற்காக முன்ஜாமீன் பெற்றேன் என்றால் நான் நாகா்கோவில் நீதிமன்றத்திற்கு சென்று வெளியில் வந்தபிறகு என்னை சுற்றி என் மனைவி, அவரது உறவினா்கள் காவல் நிலையம் வரவழைத்தாா்கள், காவல் நிலையத்திலிருந்து எனக்கு அழைப்பு வந்தது. முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பாா்த்தேனா என்றால் அவா்கள் கொடுத்த நகல் படிக்கும்படியாக இல்லை. நான், என் தந்தை என் மனைவியை அழைத்துச்சென்று நாகா்கோவில் பேருந்து நிலையத்தில் என் மனைவியை தள்ளிவிட்டு என் குழந்தையை கடத்திக்கொண்டு வந்துவிட்டேன் என்று என் மீது புகாா் கொடுக்கப்பட்டது என்றால் சாியல்ல. ஆள்கடத்தல் வழக்கில் தொடா்புடைய முதல் தகவல் அறிக்கையை எனக்கு கொடுக்கவில்லை. நாகா்கோவில் காவல் நிலையத்தில் வரதட்சனை வழக்கு என்று கூறினாா்கள். ம.தசா.ஆ.8 புகைப்படத்தில் என் மனைவி அடிக்க வந்ததாக கூறியுள்ளேன், அந்த புகைப்படத்தில் நான் உள்ளேனா என்றால் அவா் என்னை தான் அடிக்க வந்தாா். நான் தான் புகைப்படம் எடுத்தேன், ஆகவே அந்த புகைப்படத்தில் நான் இல்லை. அந்த புகைப்படம் செல்போன் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படமா அல்லது கேமராவில் எடுக்கப்பட்டதா என்றால் செல்போனில் எடுக்கப்பட்டது. புகைப்படம் செல்போனில் எடுக்கப்பட்டது என்பதற்கு சான்று கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. என் மனைவி சோ்ந்து வாழ வழக்கு தொடுத்தாா்களா என்றால் சாிதான். நான் விவாகரத்து கோாி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாிதான்.

**குறுக்கு விசாரணை பகுதி முடிந்த நேரம் 15.44 மணி.**

**(எதிா்மனுதாரா் தரப்பு வழக்கறிஞாின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.